# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :– | S.C.No.326/2018 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண் | :– | அ.சா–14 (PW–14) |
| பெயர் | :– | அந்தோணிராஜ்(காவல் துறை சான்றாளர்) |
| கணவரின்/தகப்பனாரின் பெயர் | :– | |
| ஊர் | :– | |
| வருவாய் வட்டம் | :– | |
| சமூகம் (சாதி) | :– | |
| தொழில் | :– | |
| மதம்/சமயம் | :– | |
| வயது | :– | |

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 09 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.

சான்றாளரின் கையொப்பம்

எதிரி தோன்றினார். எதிரியின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல் விசாரணை:-**

நான் தமிழ்நாடு காவல் துறையில் சிறப்புக் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 30.06.2025-ஆம் தேதியன்று பணி ஓய்வுபெற்று தற்போது சேலம், சன்னியாக்குண்டு புறவழிச் சாலைப் பகுதியில் வசிக்கிறேன்.

நான் கடந்த 31.12.2017-ஆம் தேதியன்று சேலம் மாநகரம் அழகாபுரம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணியில் இருந்தபோது அந்தக் காவல் நிலையக் குற்ற எண்434/2017 வழக்கில் இறந்துபோன செல்வக்குமார் என்பவரின் சடலத்தைச் சடலக்கூறாய்வுசெய்து அறிக்கைப் பெறுவதற்காக வேண்டுகோள் கடிதம் ஒன்றையும் செல்வக்குமாரின் சடலத்தையும் காவல் ஆய்வாளர் என்னிடம் ஒப்படைத்து சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஒப்படைக்கப் பணித்தார். நான் 14.30 மணிக்கு அவற்றை மேற்சொன்ன மருத்துவமனையின் உரிய மருத்துவரிடம் ஒப்படைத்தேன். சடலத்தை மருத்துவரிடம் அடையாளம் காட்டினேன். சடலக்கூறாய்விற்குபின் சடலத்தை அவரின் உறவினரிடம் ஒப்படைத்தேன். உடல் உள்ளுறுப்புகளை சேலம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை :-**

இல்லை.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.